**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். Crl.M.P. 299 /2025**
**வழக்கு சாட்சி. அ.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சபியுல்லா | **வயது** | : | 60 /2026 |
| **தந்தை பெயர்** | : | சாகுல் ஹமீது | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | அறந்தாங்கி | **தொழில்** | : | |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**<u>தேதி : 25.02.2026</u>**

**SWORN STATEMENT:**

மனுதாரர் எனக்கு மகள் ஆவார். எதிரி எனக்கு தெரியும், அவர் எனக்கு அக்கா பேரன். எனது மாப்பிள்ளை முகமது ரபீக் என்பவர் கத்தாரில் வேலை பார்த்த போது எதிரி முகமது அபுதாகீர் என்பவருக்கு எனது மகளுக்கு வீடு கட்டுவதற்காக ஆறு தவணைகளாக முகமது அபுதாகீர் வங்கிக் கணக்கிற்கு TMB அறந்தாங்கி கிளைக்கு ரூ.1,93,427/- அனுப்பி வைத்துள்ளார். எனது மாப்பிள்ளை வெளி நாட்டில் இருந்ததால் எதிரி முகமது அபுதாகீரை வீடு கட்ட ஏற்பாடு செய்ய சொன்னார். எனது மாப்பிள்ளை சொன்னவாறு மேற்படி எதிரி வீடு கட்டி கொடுக்காமல் ஏமாற்றி விட்டார். வீடு கட்டி கொடுக்காமலும், எனது மாப்பிள்ளை கொடுத்த மேற்படி தொகையினை திருப்பி கொடுக்காமலும் ஏமாற்றி விட்டார். பின்பு எனது மாப்பிள்ளை 2024 ஆம் ஆண்டு வெளிநாட்டில் வேலை பார்த்த போது இறந்து விட்டதால், பின்பு எனது மகளாகிய மனுதாரர் பணத்தினை திருப்பி தருமாறு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை எதிரிக்கு கொடுத்துள்ளார். மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல் வழக்கறிஞர் அறிவிப்பு திரும்ப வரப்பெற்றது. மேற்படி விவரங்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால், எனக்கு ஆரம்பம் முதலே எனது மாப்பிள்ளை வீடுகட்டி கொடுக்க சொன்னது முதல் பணம் அனுப்பியது முதல் எனக்கு நேரடியாக தெரியும். மனுதாரராகிய எனது மகள் நீதிமன்றத்தில் மேற்படி எதிரி வாங்கிய பணத்தை திருப்பி கேட்டும், தவறினால் அதற்கு

உண்டான தண்டணையை வழங்க கோரியும் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யவில்லை.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/—எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**